# இஸ்லாம் பாட மாணவர் கையேடு

## தரம் - 06

## வடமாகாணம்

### அலகு -1 (ஈமான் பற்றிய அறிமுகம்)

1) ஆமன்துபில்லாஹ் என்பதன் பொருள் யாது?

அல்லாஹ்வை விசுவாசித்தல்

2) அல்லாஹ்வின் படைப்புக்கள் ஐந்தை எழுதுக?

பூமி, சூரியன், சந்திரன், மலை, கடல். நதி

3) மனிதன் சுவாசிக்கும்வாயு எது?

ஒட்சிசன்

4) மனித உடலினுள் காணப்படும் தொகுதிகள் எவை?

சுவாசத் தொகுதி, நரம்புத்தொகுதி, சமிபாட்டுத்தொகுதி, குருதிச்சுற்றோட்டத் தொகுதி

5) ஈமான் கொள்ளவேண்டிய விடயங்கள்எத்தனை? அவை எவை?

6 அல்லாஹ்வை நம்புதல்

மலக்குகளைநம்புதல்

வேதங்களை நம்புதல்

றஸூல்மார்களை நம்புதல்

இறுதி நாளை நம்புதல்

கழா கத்ரை நம்புதல்

6) தாவரங்களின் ஒளித்தொகுப்புக்குப் பயன்படும் வாயு எது?

காபனீரொட்சைட்

### அலகு - 02 ( தவ்ஹீத் , ரிஸாலத், மஆத்)

1) ஆமன்துபில்லாஹ் உள்ளடக்கியவற்றை விசுவாசித்தவரை எவ்வாறு அழைப்பர்?

முஃமீன்

2) “தவ்ஹீத்” என்பதன் பொருள்

ஏகத்துவம்

3) “ரிஸாலத்” என்பதன் பொாருள்?

தூதுத்துவம்

4) “மஆத்” என்பதன் பொருள்?

மீண்டும் எழுப்பப்படும் மறுமை

5) தவ்ஹீத்தின் எதிர்ப்பதம் யாது?

ஷிர்க்

6) இறைவனுக்கு இணை வைப்பவர்களை எவ்வாறு அழைப்பர்?

முஷ்ரிகுகள்

7) மலக்குகளில் மிகவும் முதன்மையானவர் யார்?

ஜிப்ரீல் (அலை)

8) வஹி கொண்டு வரும் மலக்கு யார்?

ஜிப்ரீல் (அலை)

9) கப்ரில்கேள்வி கேட்கும் மலக்குகள் யாவர்?

முன்கர் - நகிர் (அலை)

10) "பாரகல்லாஹு லகி" என்பதன் பொருள் யாது?

அல்லாஹ் உங்களுக்கு பரகத் செய்வானாக

11) நபிமார்கள் எனப்படுவோர் யாவர்?

வேதங்களைப் போதிப்பதற்காக மனிதர்களுக்கு மத்தியில் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டநல்லவர்கள், பொருத்தமானவர்கள்

12) றஸூல்மார்கள்எனப்படுவோர் யாவர்?

நபிமார்களுக்கு மத்தியில்விசேடமானவர்கள்

13) முதல் ஸூர் எழுதப்பட்டதும் யாதுநிகழும்?

உலகின்அழிவு ஏற்பட்டு அனைத்து உயிரினங்களும் மரணித்து விடும்.

14) இரண்டாவது ஸூர் எழுதப்பட்டதும் யாது நிகழும்?

மரணித்தவர்கள் உயிர் பெற்றுஎழுந்து மஹ்ஷர் வெளியில் ஒன்று கூட்டப்படுவர். பின்னர் பகிரங்க விசாரணை நடைபெறும்.

## அலகு 03 (அல்லாஹ் படைப்பாளன்)

1) மனிதர்களாகிய எம்மையும் எமது மூதாதையர்களையும் படைத்தவன் யார்?

அல்லாஹ்

2) அல்லாஹ்வால் படைக்கப்பட்ட முதல் மனிதன் யார்?

ஆதம் (அலை)

3) ஆதம் (அலை) அவர்களின்விலா எலும்பில் இருந்து படைக்கப்பட்டவர் யார்?

ஹவ்வா அலைஹஸ்ஸலாம்

## அலகு - 04 (அல்லாஹ்வின் படைப்புக்கள்)

01) அல்லாஹ்வால் படைக்கப்பட்ட உயிருள்ள படைப்புக்கள் எவை?

மனிதர்கள்,மிருகங்கள், பறவைகள், தாவரங்கள்

02) அல்லாஹ்வால் படைக்கப்பட்ட எமது வெற்றுக் கண்ணுக்கு புலப்படாத மிகச் சிறிய உயிரினங்கள் எவை?

கிருமிகள். நுண்ணங்கிகள், பக்ரீரியாக்கள்

03) அல்லாஹ்வின் படைப்புக்களுள் உயிர் இல்லாத சடப்பொருட்கள் எவை?

மண், நீர். நெருப்பு, மலைகள், ஆறுகள்

04) பிரபஞ்சத்தில் காணப்படும் பிரமாண்டமான அல்லாஹ்வின் படைப்புக்கள் எவை?

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கோள்கள்

05) மலக்குகள் எதனால் படைக்கப்பட்டனர்?

ஒளியால்

06) மலக்குகளின் இயல்புகள் / பண்புகளைக் குறிப்பிடுக.

ஆண்களுமல்லர் , பெண்களுமல்லர்

பெற்றோர் பிள்ளைகள் இல்லை

மனிதர்களைப் போன்று பசி. தாகம், ஆசை, சளைப்பு , தூக்கம் முதிர்ச்சி போன்றன ஏற்படாது

தெய்வீகத்தன்மை கிடையாது

அல்லாஹ்வினால் ஏவப்பட்டதைசெய்து முடிப்பார்கள்.

7) ஜிப்ரில் (அலை) அவர்களின் சிறப்புப் பெயர்கள் எவை?

அர்ரூஹ், நாமுஸூல் அஃழம், ரூஹூல் குத்ஸ்

8) காற்று. நீர், நெருப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பான மலக்கு யார்?

மீக்காயீல் (அலை)

9) கியாம நாள் நெருங்கும் போது ஸூர் ஊதும் மலக்கு யார்?

இஸ்ராபீல் (அலை)

10) "மலக்குல் மவ்த்" என அழைக்கப்படும் மலக்கு யார்? இவரது பணி யாது?

இஸ்ராயீல் (அலை) உயிர்களைக் கைப்பற்றுதல்

11) மனிதர்கள் செய்யும் நன்மை தீமைகளைப் பதிவு செய்யும் மலக்குககள் யார்?

ரகீப் (அலை) அதீத் (அலை)

12) கப்ரில் விசாரணை செய்யும் மலக்குகள் யாவர்?

முன்கர் (அலை) - நகீர் (அலை)

13) சுவர்க்கத்தின் அதிபதி யார்?

ரிழ்வான் (அலை)

14) நரகத்தின் அதிபதி யார்?

மாலிக் (அலை)

15) ஜின்கள் எதனால் படைக்கப்பட்டுள்ளனர்?

நெருப்பால்

16) ஜின்களின் இயல்புகள் / பண்புகள் எவை?

நெருப்பால் படைக்கப்பட்டுள்ளனர்

மனிதர்களைப்போன்றுபசி, தாகம், உறக்கம், ஆசை, குடும்பம் போன்றன காணப்படும்.

17) ஜின்களுக்கு மத்தியில் குழப்பம் விளைவித்து இறை கட்டளைக்கு மாறு செய்யும் பிரிவினர் யார்?

ஷைத்தான்கள்

18) ஷைத்தான்களின் தலைவன் யார்?

இப்லீஸ்

## அலகு - 05 (அல் இஸ்லாம்)

1) இஸ்லாம் என் அரபுச் சொல்லின் பொருள் யாது?

சாந்தி, சமாதானம், கட்டுப்படுதல், சரணடைதல்

2) அர்கானுல் இஸ்லாம் /இஸ்லாத்தின் தூண்கள் எத்தனை?அவை எவை?

05 ஷ ஹாதா (கலிமா)
ஸலாத்
ஸக்காதட
ஸவ்ம்
ஹஜ்

3) ஷ ஹாதா என்றால் என்ன?

வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது ரஸீல் என்று சாட்சி பகிர்ந்து ஈமான் கொள்ளுதல்.

4) இஸ்லாத்தின் சிறப்புக்களைக் குறிப்பிடுக.

அல்லாஹ் அருளிய இறுதி மார்க்கம்
இயற்கையின் மார்க்கம்
எக்காலத்திலும் எவ்விடயத்திலும் பின்பற்றத்தக்கமார்க்கம்
நீதி, நேர்மை, உண்மை, சகிப்புத்தன்மை, சகவாழ்வு முதலானவற்றைக் கொண்டுள்ளது.

5) இஸ்லாமிய வாழ்க்கைமுறையைப் பின்பற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது யாது?

உலக வாழ்வில் நிம்மதியும், அல்லாஹ்வின் திருப்தியும் , மறுமையின்சுவன் வாழ்வும்

## அலகு - 06 (இஸ்லாத்தின் கடமைகள்)

1) இஸ்லாம் கூறும் கடமைகளில் இரண்டாவது கடமை எது?

தொழுகை

2) ஒரு முஸ்லிம் நாளாந்தம் எத்தனை வேளை தொழ வேண்டும்.

ஐந்து வேளை

3) முஸ்லிமுக்கும் காபிருக்குமிடையில் உள்ள வேறுபாடு யாது?

தொழுகையை விடுதல்

4) இஸ்லாம் கூறும் கடமைகளுள் மூன்றாவது கடமை எது?

ஸக்காத்

5) ஸக்காத் என்றால் என்ன?

வசதி படைத்த ஒவ்வொரு முஸ்லிமும் தமது செல்வத்திலிருந்து ஒரு பகுதியை ஸக்காத் பெறத் தகுதியுடைய கூட்டத்தினருக்கு வழங்குவதைக் குறிக்கும்

6) நபி (ஸல்) அவர்களால் யமன் நாட்டுக்கு கவர்னராகஅனுப்பப்பட்டவர் யார்?

முஆத் (ரழி)

7) அல்லாஹ்வால் விதியாக்கப்பட்டுள்ள நான்காவது கடமை எது?

நோன்பு

8) பர்ளான நோன்பு நோற்கப்படும் மாதம் எது?

ரம்ழான்

9) நோன்பின் மூலம் கிடைக்கும் பயன்கள் எவை?

பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

சுவனம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும்

10) நோன்பு தொடர்பான ஹதீஸ் ஒன்றைத் தருக.

யார் ரம்ழான் மாதத்தில் ஈமானோடும் நற் கூலியை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கின்றாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

11) இஸ்லாம் விதித்துள்ள கடமைகளுள் ஐந்தாவது கடமை எது?

ஹஜ்

12) ஹஜ் தொடர்பான ஹதீஸ் ஒன்றைக் குறிப்பிடுக.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவர்க்கத்தைத் தவிர வேறு சன்மானம் இல்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## அலகு - 07 (அத்தஹாரத்)

1) அத்தஹாரத் என்றால் என்ன?

சுத்தம்

2) அகச்சுத்தம்என்றால் என்ன?

துர்க்குணங்களில் இருந்து உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவது அகச்சுத்தம் எனப்படும்.

3) உளச்சுத்தை ஏற்படுத்தும் நல்ல மல்கள் எவை?

அல்குர் ஆன் ஓதுதல்

பாவ மன்னிப்பு கோரல்

திர்க் செய்தல்

ஸலவாத்துக் கூறல்

தஸ்பீஹ் செய்தல்

4) புறச் சுத்தம் என்றால் என்ன?

நஜீஸ்களிலிருந்து உடல், உடை, வாழிடம், சுற்றாடல் என்பவற்றை சுத்தமாக வைத்திருத்தல்.

5) நஜீஸை அகற்றும் முறையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை எவை?

03

கடுமையான நஜீஸ்

சாதாரண நஜீஸ்

இலகுவான நஜீஸ்

6) கடுமையான நஜீஸிற்கு உதாரணம் தருக.

நாய், பன்றி என்பவற்றின் உமிழ் நீர், இரத்தம்

7) சாதாரண நஜீஸிற்கு உதாரணம் தருக.

இரத்தம், செத்த பிராணிகள், வாந்தி, மதுபானம்

8) இலகுவான நஜீஸிற்கு உதாரணம் தருக.

இரண்டு வயது பூர்த்தியடையாத , தாய்ப்பாலை மட்டும் உணவாக உட் கொள்கின்ற ஆண் குழந்தையின் சிறு நீர்

9) நீரின் தன்மையையும் கொள்ளளவையும் பொறுத்து அதனை எத்தனை வகையாகப் பிரிக்கலாம் அவை எவை?

03

மாஉன் தஹுூர் (பரிசுத்தமான நீர்)

மாஉன் தாஹிர் (சுத்தமான நீர்)

மாஉன் நஜிஸ் (அசுத்தமான நீர்)

10) மாஉன் தஹுூர் வகையை சார்ந்தவை எவை?

கடல் நீர், மழை நீர், குளத்துநீர் , ஆற்று நீர், ஊற்று நீர், கிணற்று நீர்

11) மாஉன் தஹுூர் நீரை எவற்றுக்காக பயன்படுத்தலாம்?

குளித்தல்

வுழுச் செய்தல்

நஜீஸ்களைத் துப்புரவு செய்தல்.

12) மாஉன் தாஹிர் வகையைச்சார்ந்தவை எவை?

தேநீர், கோப்பி, இளநீர், பன்னீர், குளிர்பானம்

13) மாஉன் நஜிஸிற்கு உதாரணம் தருக?

சாக்கடை நீர், சிறுநீர்

## அலகு - 08 (அத்தஹாரத் II வுழூ )

1) வுழு இன்றி நிறைவேற்ற முடியாத கடமைகள்எவை?

தொழுதல், தவாப் செய்தல்

2) வுழுவின் பர்ளுகள் எத்தனை? அவை எவை?

6

நிய்யத்து வைத்தல்

முகத்தை முழுமையாகக்கழுவுதல்

இரண்டு கைகளையும் முழங்கை உட்படக் கழுவுதல்

தலையை மஸ்ஹு செய்தல்

இரு கால்களையும் கரண்டைக்கால் உட்படக்கழுவுதல்.

மேலே கூறப்பட்ட ஒழுங்கைப்பேணிச் செய்தல்.

## அலகு - 09, 10 (தொழுகை I, II)

1) குழந்தைகளுக்கு தொழுகையை பயிற்றுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஹதீஸை எழுதுக.

உங்கள் குழந்தைகள் ஏழு வயதை அடைந்து விட்டால் அவர்களைத் தொழும் படி ஏவுங்கள் பத்து வயதை அடைந்தும் தொழாமலிருந்தால் அவர்களை அடித்தாவது தொழச்செய்யுங்கள்.

2) தொழுகையை விட்டவர்களுக்கு வழங்கப்படும் நரகத்தின் பெயர் யாது?

ஸகர்

3) தனித்துத் தொழுவதை விட ஜமா அத்தாகத் தொழுவதால் கிடைக்கும் நன்மையின் அளவு யாது?

27 மடங்கு

4) தொழுகையின் மூலம் கிடைக்கும் பயன்கள் எவை?

உள்ளம் தூய்மையடையும்

உடலின் வெளி உறுப்புக்கள் சுத்தமடையும்

உடல் உள ஆரோக்கியம் கிடைக்கும்

பாவங்கள் களையப்படும்

அல்லாஹ்வை வழிப்படுத்துவதற்கான பயிற்சி கிடைக்கும்

5) நபி (ஸல்) அவர்கள் சுவர்க்கத்தின் திறவுகோள் என வர்ணித்த இபாதத் எது?
தொழுகை

6) ஒரு முஸ்லிம்தொழுகையை ஆரம்பிக்க வேண்டிய ஆகக் குறைந்த வயது யாது?
ஏழு (7)

7)ஷர்த்துக்கள் என்பதன் தமிழ் கருத்து யாது?
நிபந்தனைகள்

8) தொழுகையின் பர்ளுகள் எத்தனை?
19

9) முப்திலாத் என்றால் என்ன?
தொழுகையை முறிக்கும் செயற்பாடுகள்

10) தொழுகையில் ஓதப்படும் பர்ளான் ஓதல்களைக் குறிப்பிடுக.
அல்லாஹுஅக்பர் என்று ஆரம்ப தக்பீர்சொல்லல்
ஸூறதுல் பாத்திஹா
அத்த ஹிய்யாத்

11) தொழுகையில் ஓதப்படும் ஸுன்னத்தானஓதல்களைக் குறிப்பிடுக.
வஜ்ஜஹ்து
ஸூறா பாத்திஹா முடிவில் ஆமீன் கூறல்
ஸுப்ஹான றப்பியல் அழீம் வபிஹம்திஹி
ஸுப்ஹான றப்பியல் அஃலாவபிஹம்திஹி
ஸுப்ஹுத் தொழுகையில் குனூத் ஓதுதல்

## அலகு - 11 (நோன்பு நோற்போம்)

1) இஸ்லாமிய வருடத்தில் ஒன்பதாவது மாதம் எது?
றம்ழான்

2) நோன்பின் பர்ளுகள் எத்தனை? அவை எவை?
2
நிய்யத்து வைத்தல்
ஸஹர் முடிவில் இருந்து நோன்பு திறக்கும் நேரம் வரை நோன்பை முறிக்கும் எந்தக்காரியத்திலும் ஈடுபடாமலிருத்தல்.

3) நோன்பின் மூலம் வளர்க்கப்படும் நற் பண்புகள் எவை?
இறையச்சத்தைப் பலப்படுத்துதல்
உடல் ஆரோக்கியம் பெறல்
பொறுமை, கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளல்
சிக்கனம் பேணல்
மற்றவர்களன் துன்பங்கள் , ஏழைகளின் பசித்துயரை உணர்தல்
ஸதகாக்கள் செய்தல்

4) ரம்ழான் மாதத்தின் சிறப்புக்களைத் தருக.
துஆக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.
சுவர்க்கம் அல்கரிக்கப்படுகின்றது
நரகம் மூடப்படுகின்றது
ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர்

5) ரம்ழான் மாதத்தில் உள்ள சிறப்பான இரவு எது?

லைலதுல் கத்ர்

6) ரம்ழான் மாதத்தில் செய்ய வேண்டிய சிறப்பான அமல்கள் எவை?

நல்லமல்கள் செய்து நன்மையை திரட்டுதல்

எமக்காகவும் எமது சமூகத்திற்காகவும் நாட்டின் நன்மைக்காகவும் துஆக் கேட்டல்

ஸஹர் நேரத்தில் தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றல்

அதிகமாக தர்மம் செய்வதில் ஈடுபடல்

நோன்பு துறக்கும் போது முடிந்தவரை நோன்பாளிகளான நண்பர்கள், சுற்றத்தாரை இணைத்துக் கொள்ளல்

7) லைலதுல் கதிர் இரவின் சிறப்பு யாது?

ஆயிரம் மாதங்களை விடச் சிறப்பானது

இந்த இரவில் தான் அல்குர்ஆன் இறக்கி வைக்கப்பட்டது.

## அலகு - 12 (பெற்றோரைப் பராமரிப்போம்)

1) ஒருவர் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய உபகாரங்கள் எவை?

நன்றி செலுத்துதல்

பெற்றோருக்காகப் பிரார்த்தித்தல்

கனிவாகப் பேசுதல் அவர்களின் சொல்லைக் கேட்டலும்

பெற்றோரிடம் அனுமதி பெற்று காரியங்களில் ஈடுபடல்

பெற்றோரின் நண்பர்களையும் உறவினர்களையும் மதித்தல்.

## அலகு - 13 (ஆசிரியரை மதிப்போம்)

1) இஸ்லாத்தின் முதலாவது ஆசிரியர் யார்?

முஹம்மத் (ஸல்)

## அலகு - 14 (நாவைப் பேணுவோம்)

1) நாவைப் பேணுதல் தொடர்பான ஹதீஸ் ஒன்றை எழுதுக.

நாவைப் பேணுபவனுக்கு சுவர்க்கத்தைப் பெற்றுத் தர நான் பொறுப்பு என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

2) நாவை எவ்வாறான செயல்களுக்கு பயன்படுத்தக் கூடாது?

புறம், கோள், திட்டுதல், குறை கூறுதல், பட்டப்பெயர் சூட்டுதல்

## அலகு - 15 (அனுமதி பெறுவோம்)

1) அனுமதி பெறுவதற்கான ஒழுங்குகள் எவை?

பிறர்இல்லத்தினுள் நுழைய முன் ஸலாம் கூற வேண்டும்

மூன்று தடவைகள் மாத்திரம் அனுமதி கோருதல்

வீட்டினுள் உற்றுப்பார்க்காதிருத்தல்

## அலகு - 16 (பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குவோம்)

1) நாம் பிறருடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்

இரக்கத்தோடு நடந்து கொள்ள வேண்டும்

இயலுமான உதவிகளைச் செய்ய வேண்டும்

மற்றவர்களின் துன்பங்களை நீக்க வேண்டும்

எமது தேவையை விட மற்றவர்களின் தேவைகளுக்க முடியுமான அளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

## அலகு - 17 (அல்குர்ஆன் அறிமுகம்)

1) நபி (ஸர்) அவர்களுக்கு எத்தனையாவது வயதில் அல்குர் ஆன் அருளப்பட்டது?

40வது வயதில்

2) நபி (ஸல்) அவர்களுக்கு முதன்முதலில் அருளப்பட்ட ஸூரா எது?

ஸூரதுல் அலக்

3) நபி (ஸல்) அவர்களுக்கு எத்தனை வருடங்களாக அல்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டன?

40- 63 வயது வரை (23 வருடங்கள்)

4) அல்லாஹ்வினால் மனிதர்களுக்கு அருளப்பட்ட பொதுவான வழிகாட்டி எது?

அல்குர்ஆன்

5) அல்குர் ஆனின் மறு பெயர்களைத் தருக?

அல்புர்கான், அல்கிதாப் , அத்தன் ஸீல்

6) குத்தாபுல் வஹீ என அழைக்கப்பட்டோர் யாவர்?

வஹியை எழுதுவோர்

7) அல்குர்ஆனில் உள்ள மொத்த வசனங்களின் எண்ணிக்கை யாது?

6666 வசனங்கள்

8) அல்குர் ஆனில் மொத்தம் எத்தனை அத்தியாயங்கள் / ஸூறாக்கள் உள்ளன?

114

9) அல்குர் ஆன் வசனங்கள் எத்தனை ஜுஸ்களாகவும் , மன்ஸில்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது?

30 ஜுஸ்கள்

7 மன்ஸில்கள்

10) அல்குர் ஆனை ஓதும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் எவை?

வுழு செய்து சுத்தமாகிக் கொள்ளல்

உடல், ஆடை என்பவற்றை சுத்தமாக வைத்துக் கொள்ளல்

ஓத ஆரம்பிக்கும் போது அஊதுசொல்லி அதனைத்தொடர்ந்து பிஸ்மில்லாஹ் சொல்லல்

தஜ்வீத் முறையினைப் பேணி அழகாக ஓதுதல்

11) பின்வருவனவற்றின்பொருளை எழுதுக.

கிரா அதுல்குர்ஆன் - அல்குர் ஆனை ஓதுதல்

கலாமுல்லாஹ் - அல்லாஹ்வின் பேச்சு

## அலகு - 18, 19 (அல்குர்ஆனை ஓதுவோம்)

1) அல்குர் ஆனில் இறுதியாக அமைந்துள்ள 3 ஸூராக்களும் எவை?

ஸூறதுல் இஹ்லாஸ், ஸூறதுல் பலக், ஸூறதுல் நாஸ்

2) ஸூறதுல் இஹ்லாஸ் அல்குர் ஆனில் எத்தனையாவது ஸூறா? இது எத்தனை ஆயத்தங்களைக்கொண்டது?

112 வது ஸூறா, 4 ஆயத்தங்கள்

3) ஸூறா இஹ்லாஸ் எதனை வலியுறுத்துகின்றது?

அல்லாஹ் ஒருவன் என்பதையும் அவன் தான் உண்மையான இறைவன் என்பதையும் வலியுறுத்துகின்றது.

4) ஸூறதுல் இஹ்லாஸின் வேறு பெயர்கள் எவை?

ஸீறதுல் அஹத், ஸீறதுல் தௌஹீத்

5) இஹ்லாஸ் என்பதன் கருத்து யாது?

தூய்மை

6) ஸூறதுல் பலக் அல்குர் ஆனில் எத்தனையாவது ஸூறா? இதுஎத்தனை வசனங்களைக் கொண்டது?

113வது ஸூறா, 5 வசனங்கள்

7) பலக் என்ற சொல்லின் கருத்து யாது?

அதிகாலை

8) ஸூறா பலக் எதனைச் சுட்டிக்காட்டுகின்றது?

இருளின் கேடுகளில் இருந்தும் பொறாமைக்காரர் , சூனியக்காரர்களின் தீங்குகளில் நின்றும் பாதுகாப்பு தேடும் வகையில் உள்ளது.

9) ஸூறதுன் நாஸ் அல்குர் ஆனில் எத்தனையாவது ஸூறா? இது எத்தனை வசனங்களைக் கொண்டது?

114வது ஸூறா, 6 வசனங்கள்

10) நாஸ் என்ற அரபுச் சொல்லின் கருத்து யாது?

மனிதர்கள்

11) ஸூறா நாஸ் எதனைச் சுட்டிக்காட்டுகின்றது?

தீங்கான மனிதர்கள், ஜின்கள், மற்றும் மனதில் தோன்றும் சந்தேகங்கள் என்பவற்றில் இருந்தும் பாதுகாப்புத் தேடும் வகையில் அமைந்துள்ளது.

12) ஸூறதுல் பீல் அல்குர் ஆனில் எத்தனையாவது ஸூறா? இது எத்தனை வசனங்களைக் கொண்டது?

105வது ஸூறா, 05 வசனங்கள்

13) ஸூறத்துல் பீல் எதனைப் பற்றிக் கூறுகின்றது?

நபி (ஸல்) அவர்கள் பிறந்த ஆண்டில் ஏற்பட்ட மிக முக்கியமான சம்பவங்களை நினைவு கூறுகின்றது.

14) அல்லாஹ் தனது மாளிகையைத் தகர்க்க வந்த ஆப்ரஹாவின் யானைப் படையை எதனைக் கொண்டு அழித்தான்?

அபாபீல் எனும் சிறிய பறவைக் கூட்டத்தைக் கொண்டு

15) பீல் என்பதன் கருத்து யாது?

யானை

16) நபி (ஸல்) அவர்கள் பிறந்த வருடம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

ஆமுல்பீல் (யானை வருடம்)

17) மக்காவில் இறக்கப்பட்ட ஸூறாக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

மக்கீ ஸூறாக்கள்

## அலகு - 20 (ஹதீஸ்)

1) ஹதீஸ் என்றால் என்ன?

நபி (ஸல்) அவர்களின் சொல், செயல் , அங்கீகாரம், பண்புகள் , வர்ணனைகள் என்பன ஹதீஸ் ஆகும்.

2) இஸ்லாத்தின்அடிப்படை மூலாதாரங்கள் எவை?

அல்குர் ஆன், ஸுன்னா

3) இஸ்லாத்தின் முதலாவது சட்ட மூலாதாரம் எது?

அல்குர்ஆன்

4) ஹதீஸ் துறையில் சிறப்புற்று விளங்கிய ஸஹாபாக்களைக் குறிப்பிடுக.

ஆயிஷா (ரலி), இப்னுஉமர் (ரலி), அபூஹுரைரா (ரலி)

## அலகு - 21, 22 (ஸீரதுர் ரஸூல்)

1) நபி (ஸல்) அவர்களின் தந்தை, தாயின் பெயரை எழுதுக?

தந்தை - அப்துல்லாஹ்

தாய் - ஆமினா

2) நபி (ஸல்) அவர்கள் எப்போது , எங்கே பிறந்தார்?

கி.பி 571 றபீஉல் அவ்வல் மாதம் பிறை 12 , மக்காவில்

3) நபி (ஸல்) அவர்களுக்கு பாலூட்டி வளர்த்த பெண்மணி யார்?

ஹலீமத்துஸ் ஸஃதிய்யா

4) அய்யாமுல் ஜாஹிலிய்யா என்றால் என்ன?

அறியாமைக் காலம்

5) நபி (ஸல்) அவர்கள் உண்மை பேசியதால் எவ்வாறு அழைத்தனர்?

அஸ்ஸாதிக் - உண்மையாளர்

6) நபி (ஸல்) அவர்கள் நம்பிக்கையாளராக இருந்தமையால்எவ்வாறு அழைத்தனர்?

அல்அமீன் - நம்பிக்கையாளர்

7) நபி (ஸல்) அவர்களின் முதல் மனைவி யார்? அவரை திருமணம் செய்யும் போது நபி(ஸல்) அவர்களுக்கு எத்தனை வயது?

கதீஜா (ரழி)

25 வயது

8) நபி (ஸல்) அவர்கள் தியானத்தில் தனித்திருந்த இடம் எது?

ஹிரா

9) நபி(ஸல்) முன் தோன்றிய மலக்கு யார்?

ஜிப்ரில் (அலை)

10) இக்ரஃ என்பதன் பொருள் யாது?

ஓதுவீராக

11) நபி (ஸல்) அவர்களுக்கு ஜிப்ரில் (அலை) ஓதிக்காட்டிய ஸூறா எது?

ஸூரா அலக்கின் முதல் 5 வனங்கள்

12) நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலில் வஹி அருளப்பட்ட போது கதீஜா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களை யாரிடம் அழைத்துச் சென்றார்?

வரக்கத் இப்னு நெளபல்

13) நுபுவ்வத் என்றால் என்ன?

நபிப்பட்டம்

14) முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஆண், பெண்களைக் குறிப்பிடுக?

ஆண் - அபூபக்ர் (ரழி)

பெண் - கதீஜா (ரழி)

15) முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்ற சிறுவன் யார்?

அலி (ரழி)

16) மக்கா குறைஷியர்கள்நபி(ஸல்) அவர்களை எவ்வாறு துன்புறுத்தினார்?

சாஸ்திரக்காரன், சூனியக்காரன், கவிஞன் என்றெல்லாம் வசை பாடினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் செல்லும் பாதையில் முட்களைப் பரப்பினர்.

தலையில் குப்பைகளைக் கொட்டினர்

தொழுது கொண்டிருந்த நபியின் தோளில் ஒட்டகையின் அழுகிய குடலைப் போட்டனர்.

17) மக்கா குறைஷியர் நபி (ஸல்) அவர்களையும் அவரது குடும்பத்தாரையும் எங்கு தடுத்து வைத்து துன்புறுத்தினர்?

ஷிஃபு அபூதாலிப் பள்ளத்தாக்கில்

18) ஆமுல் ஹுஸ்ன் என்றால் என்ன?

துக்க ஆண்டு

19) யத்ரிப் என்பது எவ்விடத்தைக் குறிக்கும்?

மதீனா

## அலகு - 23 (உம்மஹாத்துல் முஃமினீன்கள்)

1) உம்மஹாதுல் முஃமினீன் என்பதன் பொருள் யாது?

இறை நம்பிக்கையாளர்களின் அன்னையர்

2) நபி (ஸல்) அவர்களின் மனைவியரை அல்குர்ஆன் எவ்வாறு குறிப்பிடுகின்றது?

விசுவாசிகளுக்கு அன்னையர்

3) நபி (ஸல்) அவர்களுக்கு எத்தனை மனைவியர்? அவவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

11

கதீஜா (ரழி). ஸவ்தா (ரழி) , ஆயிஷா (ரழி) , ஹப்ஸா (ரழி) , ஸைனப் பினத் குஸைமா (ரழி)

உம்மு ஸல்மா ((ரழி) , உம்முஹபீபா ((ரழி) , ஜீவைரியா (ரழி) , ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி)

ஸபிய்யா (ரழி) , மைமூனா (ரழி)

4) கதீஜா (ரழி) அவர்களின் தந்தையின் பெயர் யாது?

குவைலித்

5) கதீஜா (ரழி) அவர்களிடம் காணப்பட்ட சிறந்த பண்புகள் எவை?

நல்லொழுக்கம்

பெருந்தன்மையும் தாராள மனப்பாங்கும் கொண்டவர்

இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகத்தனது சொத்து செல்வங்களை அர்ப்பணம் செய்தார்.

6) நபி (ஸல்) அவர்களுக்கும் கதீஜா (ரழி) அவர்களுக்கும் எத்தனை குழந்தைகள் பிறந்தனர்? அவர்களின் பெயரைக் குறிப்பிடுக.

6

| | |
|---|---|
| ஸைனப் (ரழி) | றுகையா (ரழி) |
| உம்முகுல்தூம் (ரழி) | பாத்திமா (ரழி) |
| காஸிம் | அப்துல்லாஹ் |

7) கதீஜா (ரழி) அவர்கள் எப்போது வபாத்தானார்கள்?

நுபுவ்வத் பத்தாம் ஆண்டு

8) கதீஜா (ரழி) அவர்களின் சிறப்புப் பெயர் யாது?

தாஹிரா- பரிசுத்தவாளர்

9) ஆயிஷா (ரழி) அவர்களின் தந்தை, தாயின் பெயரைத் தருக.

தந்தை - அபூபக்ர் ஸித்தீக் (ரழி)
தாய் - உம்முரூமான்

10) ஆயீஷா (ரழி) அவர்கள் எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?

நுபுவ்வத் 2ஆம் ஆண்டு

11) நபி (ஸல்) அவர்களை மண முடித்த கன்னிப் பெண் யார்?

ஆயிஷா (ரழி)

12) ஆயிஷா (ரழி) அவர்களிடம் காணப்பட்ட உயர்ந்த குணங்கள் எவை?

பயபக்தியுடையவர்

அதிகமாக நோன்பு நோற்பவர்

தானதர்மம் செய்பவர்

மிக விவேகமுள்ளவர்

கல்வியிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கியவர்

பெண்களில் அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவர்

13) ஆயிஷா (ரழி) அவர்களின் சிறப்புப் பெயர்களைத் தருக?

அஸ்ஸித்தீக்கா
ஹூமைரா

14) ஆயிஷா (ரழி) அவர்கள் எத்தனையாவது வயதில் எப்போது வபாத்தானார்?

68 வயதில் , ஹிஜ்ரி 5ஆம்ஆண்டு

## அலகு - 24 நபி (ஸல்) அவர்களின் உத்தம தோழர்களில் ஒருவர்)

1) ஸஹாபாக்கள் எனப்படுவோர் யார்?

நபி (ஸல்) அவர்களைத் தமது வாழ் நாளில் நேரடியாகக்கண்ட முஸ்லிம்கள்

2) ஸஹாபாக்களின் பெயர்கள் உச்சரிக்கப்படும் பொழுது எவ்வாறு கூற வேண்டும்.

ரழியல்லாஹூ அன்ஹூ

3) ரழியல்லாஹூ அன்ஹூ என்பதன் பொருள் யாது?

அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான்

4) நபி (ஸல்) அவர்களால் சிறந்த காலம் என குறிப்பிடப்பட்ட காலம் எது?

ஸஹாபாக்களுடன் வாழ்ந்த காலம்

5) ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள் கற்றுக் கொண்ட மொழிகள் எவை?

அபரானி, சுர்யானி

6) ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள் ஆற்றிய பணிகளைத் தருக?

அல்குர் ஆனைக் கற்பதிலும் அதனை மனனம் செய்வதிலும் பிரதி பண்ணிப் பாதுகாப்பதிலும் பெரும் பங்கு வகித்தவர்

அபூபக்கர் (ரழி) அவர்களின் காலத்தில் அல்குர்ஆனை ஒன்று சேர்த்து நூலுருப்படுத்தியவர்

7) ஸல்மானுல் பாரிஸி (ரழி) எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

பாரசீகம்

8) ஸல்மானுல் பாரிஸி (ரழி) அவர்களின் பண்புகளைக் குறிப்பிடுக?

மிகவும் எளிமையாக வாழ்ந்தார்

தன் கைகளினாலேயே சம்பாதித்து உண்பார்

தர்மம் செய்பவராக இருந்தார்கள்

## அலகு - 25 (அஹ்லுல் பைத்)

1) அஹ்லுல் பைத் எனப்படுவோர் யாவர்?

நபி(ஸல்) அவர்களின் குடும்பத்தினர்

2) பாத்திமா (ரழி) அவர்களின் தாய், தந்தையரின் பெயரை எழுதுக?

தாய் - கதீஜா (ரழி)

தந்தை - முஹம்மத் (ஸல்)

3) பாத்திமா (ரழி) யாரைத் திருமணம் செய்தார்?

அலி (ரழி) அவர்களை

4) பாத்திமா (ரழி) அவர்களின் பிள்ளைகளின் பெயரைத் தருக?

ஹஸன் (ரழி) , ஹுஸைன் (ரழி)

5) பாத்திமா (ரழி) அவர்களிடம் காணப்பட்ட குணப் பண்புகள் எவை?

இஸ்லாத்தைப் பேணுதலாகக் கடைப்பிடித்தார்.

வறுமையிலும் பொறுமையாக இருந்தார்

தொழுகையிலும் நோன்பு நோற்பதிலும் அதிக காலத்தைக் கழித்தார்

அன்பும் ஆதரவும் ஈகையும் இரக்கமும் இவரிடம் காணப்பட்டன.

6) நபி (ஸல்) அவர்கள் பாத்திமா (ரழி) அவர்களை எவ்வாறுபுகழ்ந்தார்கள்

அகில உலகப் பெண்களின் தலைவி

சுவர்க்கத்துப் பெண்களின் தலைவி

## அலகு 26 (ஆதம் (அலை))

1) உலகின் முதல் மனிதன் யார்?

ஆதம் (அலை)

2) அபுல் பஷ்ர் என்பதன் பொருள் யாது?

மனித இனத்தின் தந்தை

3) மலக்குகள் எதனால் படைக்கப்பட்டனர்?

ஒளியினால்

4) ஜின்கள் எதனால் படைக்கப்பட்டனர்?

நெருப்பால்

5) ஆதம் (அலை) அவர்களின் மனைவி யார்?

ஹவ்வா (அலை)

6) ஆதம் (அலை) அவர்களுக்கும் வெள்ளிக்கிழமைக்கும் உள்ள தொடர்பு யாது?

ஆதம் (அலை) அந்நாளில் படைக்கப்பட்டார்

சுவர்க்கத்தில் இருத்தப்பட்டார்

சுவர்க்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்

அந்நாளில் மரணமானார்.

7) ஆதம் (அலை) அவர்களின் மகன் யார்?

ஷூது (அலை)

8) ஆதம் (அலை) அவர்களையும் ஹவ்வா (அலை) அவர்களையும் அல்லாஹ்வின் கோபத்துக்கு உள்ளாக்கச்செய்தவன்யார்?

இப்லீஸ்

## அலகு - 27 (அயலவருடன் நல்லுறவைப் பேணுவோம்)

1) அயலவர்களின்மூன்று வகையினரும் யாவர்?

அயல் வீடுகளில் வாழும் உறவினர்கள்

அயல் வீடுகளில்வாழும்முஸ்லிம்கள்

அயல் வீடுகளில் வாழும் முஸ்லிம் அல்லாதவர்கள்.

2) நாம் அயல் வீட்டாருடன் எவ்வாறு நடந்து கொண்ண வேண்டும்

கனிவாக நடந்துகொள்ள வேண்டும்

அவர்களுக்கு ஸலாம் கூற வேண்டும்

உதவி தேவைப்பட்டால் உதவி செய்ய வேண்டும்

கடன் கேட்டால் முடிந்தவரை கொடுத்துதவல் வேண்டும்

துன்பம் ஏற்பட்டால் ஆறுதல் கூற வேண்டும்

நோயுற்றால் நோய் விசாரிக்க வேண்டும்.

## அலகு - 28 (சுற்றாடலைப் பாதுகாப்போம்)

1) சுற்றாடல் என்றால் என்ன?

எம்மைச் சூழவுள்ள அனைத்தும் சுற்றாடல் ஆகும்.

2) இயற்கை வளங்கள் பாதிக்கப்படுவதற்கான காரணங்கள் எவை?

காடழிப்பு

இரசாயனக்கழிவுகள் கலத்தல்

அளவுக்கதிகமான புகை வெளியேறல்

3) சுற்றாடலில் காணப்படும் இயற்கை வளங்கள் எவை?

மலைகள், நீர் வீழ்ச்சிகள், மரம், செடி, கொடிகள்

4) சூழலை பாதுகாப்பதன் மூலம்கிடைக்கும் நன்மைகள்எவை?

எமது சிந்தனை சீரடையும்

சுகாதாரம் பேணப்படும்

வளங்கள் பெருகும்

வாழ்க்கை வளம் பெறும்

## அலகு - 29 (உயிர்களுக்கு அன்பு காட்டுவோம்)

1) உயிரினங்களோடு ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

இரக்கம் காட்டுதல்

அளவுக்கு அதிகமான மை ஏற்றாதித்தல்

துன்புறுத்தக் கூடாது

உயிரினங்களின் உறுப்புக்களைச் சிதைக்கக்கூடாது

தாயையும் சேயையும் பிரிக்கக் கூடாது

நோயுற்றால் சிகிச்சையளித்தல்

2) பிராணிகளின் மூலம் கிடைக்கும் பயன்கள் எவை?

உண்பதற்கு இறைச்சி

குடிப்பதற்கு பால்

ஆடை நெய்வதற்கு, நூல், செருப்பு, பை என்பன செய்வதற்கு தோல்

சில உயிரினங்களை அழகுக்காகவும் பாதுகாப்புக்காகவும்

வேட்டையாடுதல் , உழுதல், பிரயாணித்தல், பாரம் தூக்குதல், போன்றவற்றுக்காகவும் பயன்படுகின்றன.